கப்பட்டது. இவற்றுடன் நாகராசன் என்ற ஆறு வயது சிறுவனுடைய உடலும் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. சி.எம்.சி. மருத்துவமனையினை அட்டெண்டர் சாவித்திரி நாகராசன் இவர்களின் உடல்களை பாலாற்றங்கரையில் புதைப்பதற்கு பதிலாக சாவித்திரியின் உடலுடன தவறுதலாக சிறுவன் மிகிர்குமார் பிஸ்வாஸின் உடலையும் இராட்சத அடுப்பில் போட்டு விட்டார். அடுப்பில் போதுமான தீ இல்லாததால் இவ்விரு உடல்களும் சரியாக எரியாத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஈ) இத்தவறுகளுக்குப் பொறுப்பான சி.எம்.சி. மருத்துவமனை அட்டண்டர் திரு. முருகேசன் நிர்வாகத்தினரால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வழக்கு காவல் துறையின் விசாரணையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ராட்சத அடுப்பில் கழிவுப் பொருட்களை எரிக்கக்கூடிய காரணத்தால், அந்த துர்நாற்றத்தால் அங்கு உள்ள மக்களுக்கு அடிக்கடி பல விதத்திலே தொல்லைகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தால் நகரத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பாலே அதை அமைக்க வேண்டுமென்று நீண்ட காலமாக அந்த மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? இப்படி அடிக்கடி ஏற்படுகிறது. அந்த ராட்சத அடுப்பிலே பிணத்தைப் போட்டு எரிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த ஆஸ்பத்திரியிலே ராட்சத அடுப்பை வைப்பதற்குப் பதிலாக நகரத்திற்கு அப்பாலே அதை வைக்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததை கருத்தில் கொண்டு அந்த நிர்வாகத்திடம் பேசி அவர் மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும்.

Co-operative Sugar Factory near Tiruttani

*Q. No. 40. அ- THIRV A. EKAMBARA REDDY : will the Hnerable Chief Minister be pleased to state—

(a) whether the proposal to start a Co-operative Sugar Factory at Arungolam near Tiruttani has been approved and received by the State Government; and

(b) if so, the present stage thereof?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) மற்றும் (ஆ) சர்க்கரை உற்பத்திக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஏற்கெனவே அடையப்பட்டு விட்டதால், திருத்தணி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான உரிமம் வழங்கும் குறிப்பை மைய அரசு ஒத்தி போட்டு விட்டது.

பகத்சிங் எழுதிய புத்தகம்

* வினா எண். 40. ஆ. திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பகத்சிங் எழுதிய ''நான் ஏன் நாத்திகன் ஆனேன்'' என்ற புத்தகம் தடை செய்யப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

(இ) தடையை நீக்கி புத்தகத்தை வெளியிட அரசுக்கு உத்தேசமுண்டா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) இந்த நூலின் சரியான பெயர் ''நான் நாத்திகன்—ஏன்'' இந்நூல் தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) எழவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, வீரனாகிய பகத்சிங் எழுதிய நான் ஏன் நாத்திகனானேன் என்ற புத்தகத்திற்கு மத்திய அரசு தடை விதித்திருந்தாலும் சுதந்திர வீரரான அவர் எழுதிய நூல் என்பதை மத்திய அரசு மறந்துவிட்டு தடை செய்திருப்பதைக் கண்டித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி தடையை நீக்கச் செய்து அந்த நூலை இங்கேவே அச்சடிக்கச் செய்து ஏராளமான விநியோகம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை அரசு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும், மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக தீவிரப் பிரச்சராம் செய்து வந்த ஈ. வே. ரா. பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படக் கூடிய நேரத்திலே இந்தப் புத்தகத்தை மத்திய அரசு தடைசெய்து விட்டது என்று சொன்னபோதிலும் மாநில அரசுக்கு அதை வெளியிடுவதற்கு அதிகாரம் உண்டா? இல்லையா? அந்த அடிப்படையிலே இந்தப் புத்தகத்தை இங்கே வெளியிட ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. சு. ம. துரைராஜ்: (அமைச்சரின் பேரவைச் செயலர்) 'நான் ஈத்திகன்—ஏன்' என்னும் இந்நூல் சர்தார் கே. பகத்சிங் அவர்களால் லாகூர் சிறைக் கோட்டத்திலிருந்து அவரது தந்தையாருக்கு காவற்கூட அதிகாரிகளின் அனுமதிபெற்று எழுதப்பட்ட

1979 அக்டோபர் 19]

ஒரு கடிதமாகும். அக்கடிதத்தை தோழர் பகத்சிங் அவர்களின் தகப்பனார் லாகூரிலிருந்து வெளிவரும் 'ஜனங்கள்' என்னும் ஆங்கிலக் கிழமை வெளியீட்டில் பிரசுரித்திருந்தார். 1934-ல் தோழர் பா. ஜீவானந்தம் முதலாவதாக தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது.

பின்னால் 'உண்மை' என்ற தமிழ் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிடப்பட்டது. 1979-ல் மீண்டும் நூல்வடிவில் சென்னை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாக வந்துள்ளது.

இந்த நூலில் கடவுள் எதிர்ப்புக் கொள்கைகள் நிறைந்துள் ளன. 1934-லிருந்து புழக்கத்தில் இருந்து வரும் இந்நூலைப் பற்றி அரசுக்கு எந்த ஒரு புகாரும் வரவில்லை. ஆகையால் இதைத் தடைசெய்வது பற்றிய வினா எழவில்லை.

கடவுள் உண்டு என்று ஆத்திகப் பிரசாரம் செய்ய உரிமை உள்ளது போன்றே கடவுள் மறுப்பு கொள்கை பிரச்சாரத்திற் கும் உரிமை உண்டு. மதச் சார்பற்ற இந்த நாட்டில் 'கடவுள் உண்டு' அல்லது 'கடவுள் இல்லை' என்று பிறர் மனம் புண்படாத வகையில் பிரச்சாரம் செய்ய யாவருக்கும் உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின் றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, ''1979ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.